## 11

# தேற்றரவாளனைப் பற்றிய வாக்குத்தத்தம்

## (யோவான் 15)

*“பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்” (வசனங்கள் 26, 27).*

மேல்வீட்டின் உரையாடல் ஒன்றில் இயேசு, தமது அப்போஸ்தலர்கள் இந்த உலகத்தால் வெறுக்கப்படுவார்கள் என்று கூறியிருந்தார் (15:18-25). அவரது எச்சரிப்பானது புறக்கணிக்கப்படுதல் அல்லது விமர்சிக்கப்படுதல் என்பதைக் காட்டிலும் அதிக ஆழமாகச் சென்றது. இந்த வெறுப்பில், அவர் இவ்வுலகத்தில் இருந்து பெற்றுக்கொண்ட அதே உபத்திரவம் மற்றும் எதிர்ப்பும் உள்ளடங்கி இருக்கும் என்று அவர் கூறினார். இந்த உலகமானது அவர்களை பழித்துரைக்கும், அவர்களைப் புறக்கணிக்கும் மற்றும் அவர்களை வன்மையாக எதிர்த்து நிற்கும் - அது அவர்களைக் கொலைசெய்யும் அளவிற்குக் கூடச் செல்லும். அவரது வார்த்தைகள், நடக்க இருந்தவற்றைக் குறித்து அவர்களின் பயத்தைக் கூட்டி வலுப்படுத்தி இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்கள் ஓரளவிற்கு, இயேசு அவர்களுக்கு விட்டுச் சென்ற வெளிப்பாட்டை, தங்களுக்கு ஆழ்ந்த ஊக்கமின்மையைக் கொண்டுவந்திருந்த ஒரு சத்தியத்தைப் புரிந்து கொண்டனர். இருப்பினும், ஏற்கனவே உலைச்சலும் திகிலும் அடைந்திருந்த அவர்களின் இருதயங்களில், வரவிருந்த வெறுப்பு பற்றிய கூடுதலான இந்த அதிர்ச்சி தரும் உண்மையுடன், நிச்சயமற்ற தன்மையின் இன்னொரு அடுக்கும் வைக்கப்பட்டிருந்தது. அவர்கள் சகிக்கக் கூடியதான இதைவிட மோசமான செய்தி வேறு ஏதாவது இருந்திருக்க முடியுமா?

மேல் எழுப்பும் வார்த்தைகள் அப்போஸ்தலர்களுக்கு அவசரமாகத் தேவைப்பட்டன என்பதை அறிந்த இயேசு, அவர்களின் சிந்தனைகளை எச்சரிக்கைகளில் இருந்து சில நற்செய்திகளுக்கு திருப்பினார். இந்த இடத்தில் அவர்களுக்கு அவர், தாம் உண்மையில் அவர்களைத் தனித்து விடப்போவதில்லை, ஆனால் அவர்களுக்கு ஒரு தேற்றரவாளனை அனுப்புவார் என்ற வாக்குறுதியை மறு உறுதிப்படுத்தினார். அடிப்படையில் அவர், “நான் உங்களுக்குக் கூறியுள்ளவற்றினால் நீங்கள் மூழ்கடிக்கப் பட்டிருக்கிறீர்கள் என்று நான் அறிவேன். இருப்பினும் நான் உங்களுக்கு ஒரு தேற்றரவாளனைத் தருவேன். நீங்கள் விசேஷித்த உதவியைப் பெறுவீர்கள். நான் உங்களுக்குப் பரிசுத்த ஆவியானவரை அனுப்புகிறேன்” என்று கூறினார்.

*பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய இந்தப் பாடக்கருத்து, அப்போஸ்தலர்களுடனான முந்திய உரையாடல் ஒன்றில் இயேசுவினால் தொடங்கப் பட்டிருந்தது. (காண்க 14:16, 26.) பரிசுத்த ஆவியானவர் பற்றிய கருத்தை அவர்களுக்குக் கர்த்தர் அறிமுகப்படுத்தி, அவர்கள் கலந்துரையாடக் கேட்க அவசியமான மற்ற முக்கிய தலைப்புகளில் அவரது வழியை ஏற்படுத்த அவரைப் பற்றிய ஒன்றிரண்டு தொடக்க சத்தியங்களை வெளிப்படுத்தி இருந்தார்.*

*15:26, 27ல் தரப்பட்டுள்ள உறுதிப்பாட்டின் வார்த்தைகளில் - நீண்ட ஒரே வாக்கியச் சித்தரிப்பில் - பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்கு என்ன செய்வார் என்பது தெளிவாக விரித்துரைக்கப்பட்டுள்ளது. சந்தேகத்திற்கு இடமின்றி, அவரது சித்தரிப்பு அவர்களுக்கு மிகவும் உற்சாகம் ஊட்டுவதாக இருந்தது! நாம் இந்த வார்த்தைகள் பேசப்பட்ட சந்தர்ப்பப் பொருளைத் தக்க வகையில் ஆழ்ந்து சிந்திக்கும்போது, அவைகள் நமக்கும் உற்சாகம் ஊட்டுபவையாக உள்ளன.*

## தேற்றரவாளன்

*இயேசு, பரிசுத்த ஆவியானவரை “உதவியாளர்” (“தேற்றரவாளர்”; KJV; ASV; “ஆலோசனையாளர்” ; NIV) என்று விவரித்தார். அப்போஸ்தலர்களுக்கு உதவி தேவைப்படும், மற்றும் பரிசுத்த ஆவியானவர் பிரம்மாண்டமான உதவியை அளிக்கும் உதவியாளராக இருந்தார். இவ்விடத்தில் இயேசு, paraklētos என்ற கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தினார். இது எண்ணற்ற பண்பினங்களை உள்ளடக்குகிற ஒரு விரிவான வார்த்தையாக உள்ளது. இதே வார்த்தையை யோவான், இயேசுவுக்கு 1 யோவான் 2:1ல் பயன்படுத்தினார், ஆனால் பெரும்பான்மையான மொழிபெயர்ப்புகள் அந்த அமைவில் இவ்வார்த்தையை ‘‘பரிந்துபேசுபவர்’’ என்று தரவழைக்கின்றன. ‘‘ஆறுதல்’’ என்ற ஒரே விளக்கத்திற்கு இதை மட்டுப்படுத்த இயலாத அளவுக்கு இவ்வார்த்தை மிகவும் அர்த்தம் நிறைந்ததாக உள்ளது; ஆகவே, KJV மற்றும் ASV வேதாகமங்களில் உள்ள “தேற்றரவாளன்” என்ற மொழிபெயர்ப்பு மிகவும் குறுகியது என்று பொதுவாக நினைக்கப்படுகிறது.*

*பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்குப் பல்வேறு திறன்களை அளிப்பார். அவர்கள் செய்யும்படி அவர் விரும்பிய பணியானது, அவர்களுக்கு அவசியமான வல்லமை அளிக்காத நிலையில் அதைச் செய்யும்படி அவர்களிடம் அவர் கேட்க இயலாத அளவுக்கு மிகவும் தனிச்சிறப்பானதாக இருந்தது. அவர்களுக்குத் தேவையான மாபெரும் வல்லமை, மாபெரும் அருட்கொடை என்பது பரிசுத்த ஆவியானவரின் தங்கியிருக்கும் பிரசன்னத்தின் மூலம் வர வேண்டியதாக இருந்தது.*

## அனுப்பிய ஒருவர்

*இயேசு, தாம் பரிசுத்த ஆவியை அவர்களுக்கு அனுப்பப் போவதாகக் கூறினார். அவர், “நான் பிதாவினிடத்தில் இருந்து அனுப்பப் போகிறவரும் ...” என்று கூறினார். ஒரு கருத்தில் அவரைப் பிதாவானவர் அனுப்பினார்; ஆனால் இன்னொரு கருத்தில் அவரை இயேசு அனுப்பினார். “நான்” என்பது இயேசுவின் வாக்குத்தத்தத்தில் வலியுறுத்தமாக உள்ளது, இது இயேசுவை அனுப்புகிறவராக*

அடையாளப்படுத்துகிறது. இருப்பினும் யோவான் 14:16ம் வசனம், இயேசுவின் ஜெபத்திற்குப் பதில் அளிப்பதற்காகப் பிதாவானவர் ஆவியானவரை அனுப்புவார் என்று குறிப்பிடுகிறது. 14:26ல் இயேசு, ஆவியானவரை "*என்* நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன்" என்று குறிப்பிட்டார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது). ஆறுதலின் இந்த மாபெரும் ஆசீர்வாதத்தை அளிப்பதில் பிதாவும் குமாரனும் ஆகிய இருவருமே ஈடுபட வேண்டி இருந்தது: இயேசுவின் வேண்டுகோளுக்கு இணங்க இயேசுவின் நாமத்தினாலே ஆவியானவர் பிதாவினால் அனுப்பப்படுவார். ஆவியானவரின் வருகை பற்றி பல்வேறு வழிகளில் இயேசு வாக்குத்தத்தம் அளித்தது, இயேசு பிதாவுடன் ஒன்றியிருப்பதை விவரிக்கிறது மற்றும் இது இயேசு தமது பிதாவைப் போன்ற அதே அளவில் தெய்வீகத்தை உடையவராக இருந்தார் என்பதையும் நமக்கு நினைவூட்டுகிறது.

பின்பு நாம், பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தில் மூன்றாவது உறுப்பினராக இருக்கிறார் என்பதைக் காணுகிறோம். ஆவியானவராகிய தேவன் என்ற வகையில் அவர் வந்து அப்போஸ்தலர்களிடத்தில் தங்கி, அவர்களின் ஆவிக்குரிய தேவைகள் யாவற்றையும் அளிக்க வேண்டியவராக இருந்தார். இந்த அப்போஸ்தலர்கள், இராஜ்யம்/சபையின் அஸ்திபார நிலையின் பாகம் என்ற வகையில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த அஸ்திபாரம் என்பது இயேசு கிறிஸ்துவை மூலைக்கல்லாகவும் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளை விரிவாக்கப்பட்ட அஸ்திபாரமாகவும் கொண்டு இடப்பட்டிருக்கும். (எபேசியர் 4:11-12ஐக் காணவும்.) அப்போஸ்தலர்கள் தாங்கள் செய்யும் கேட்டுக்கொள்ளப்பட்ட யாவற்றையும் நிறைவேற்றுவதற்குத் தெய்வீக வழிநடத்துதல் அவர்களுக்குத் தேவைப்பட்டிருந்தது என்பதில் தவறு எதுவும் இல்லை. அவர்களுடன் தங்கியிருந்து, அவர்களின் ஊழியத்திற்குத் தேவையானவற்றை அளித்து, அவர்களை நிலைநிறுத்தி பலப்படுத்த *தேற்றரவாளனை* இயேசு அனுப்புவார் என்று அவரே கூறக் கேட்டது அவர்களுக்கு எவ்வளவு ஆறுதலாக இருந்திருக்கும்! தேவன் வழிநடத்தும் இடத்தில், தேவையானவற்றை அவர் எப்போதுமே அளிக்கிறார் என்பதை நாம் நினைவுகூருவோமாக.

## சத்திய ஆவியானவர்

பரிசுத்த ஆவியானவரை இயேசு, "சத்திய ஆவியானவர்" என்று அழைத்தார். தனிச்சிறப்பான இந்த குறிப்புப் பெயரானது, பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தினுடைய முதன்மைப் பாகத்தைக் காண்பிக்கிறது. *சத்திய* ஆவியானவர் என்ற வகையில், விடுதலையாக்குதல், சத்தியத்தின் மூலம் ஊழியம் செய்து அதை உறுதிப்படுத்துதல் என்பதே உலகத்தில் அவரது பணிப்பொறுப்பாக இருந்தது. அப்போஸ்தலர்கள் இயேசுவினிடம் கேள்விப்பட்டு இருந்தவற்றை அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் நினைப்பூட்ட வேண்டியிருந்தது; மேலும் அவர் சபையும் உலகமும் கேள்விப்பட அவசியமான புதிய சத்தியத்தையும் அவர்களின் மனங்களுக்குக் கொண்டுவருவார் (14:26). அவர் தெய்வீக நினைவூட்டுபவராகவும் வெளிப்படுத்துபவராகவும், வெளிப்படுத்தப்பட்டு இருந்தவற்றை மேற்கொள்ளக் கூடியவராகவும் விரைவில் வெளிப்படுத்தப்பட வேண்டியவற்றுடன் அதை இணைப்பவராகவும் இருப்பார்.

இயேசு இங்கிருந்து சென்றபின்பு, சத்தியத்தைப் பெற்றுக்கொள்ளுதல்

என்பதே உலகத்தின் மிக முக்கியமான தேவையாக இருந்தது. உச்சகட்டமான இந்தத் தேவையின் மூன்று பாகங்களை நாம் அடையாளப்படுத்த முடியும்: (1) சத்தியம் உலகத்திற்கு *வெளிப்படுத்தப்பட வேண்டியதாக* இருந்தது, (2) சத்தியம் உலகத்திற்கு *உறுதிப்படுத்தப்பட வேண்டியதாக* இருந்தது மற்றும் (3) சத்தியம் உலகத்தினால் சென்று அடையத்தக்கது *ஆக்கப்பட வேண்டியதாக* இருந்தது. இந்த மூன்று அறைகூவல்களையும் பரிசுத்த ஆவியானவர் எடுத்துரைக்க வேண்டியவராக இருந்தார். அவர் சத்தியத்தைக் கொண்டுவருவார், மாபெரும் செயல்களினால் அதை நிருபிப்பார் மற்றும் அதை அவர் இந்த உலகத்திற்கு நிரந்தரமான, பயன்படுத்தத்தக்க வடிவில் கொடுப்பார்.

## சாட்சியளிப்பவர்

"பரிசுத்த ஆவியானவர் சாட்சிகொடுக்கும் முறையின் மூலமாக சத்தியத்தைத் தெரியப்படுத்துவார்" என்று சாராம்சத்தில் இயேசு விளக்கினார். இயேசுவின் செய்தியாகவும் அவரது செயல்நிறைவேற்றங்களாகவும் இருத்தல் என்பதே அவரது முதன்மை சாட்சியமாக இருந்தது. அவர் தம்மை மேன்மைப்படுத்திக் கொள்வதற்கு மாறாக, இயேசு யாராக இருந்தார் மற்றும் அவர் என்ன செய்திருந்தார் என்பவற்றைக் குறித்து மாத்திரம் சாட்சிகொடுப்பார். "அவர் என்னைக் குறித்து சாட்சியம் கொடுப்பார்" என்று இயேசு கூறினார். உலகத்திற்குத் தேவனுடைய செய்தியின் இருதயம் போன்ற மையப்பகுதியைப் பின்வரும் ஒரே வார்த்தையில் தொகுத்துரைக்க முடியும்: "இயேசு." யோவான், "ஆவியானவர் சத்தியமாகையால் ஆவியானவரே சாட்சி கொடுக்கிறவர்" என்று எழுதினார் (1 யோவான் 5:6ஆ). பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் பழைய ஏற்பாடு, இயேசுவின் வருகையைப் பற்றி முன்னுரைத்தது. புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர், இயேசு வந்திருக்கிறார் என்று வெளிப்படுத்தியது மாத்திரமின்றி, அவரது வருகை அர்த்தப்படுத்தியது என்ன என்பதைப் பற்றிக் கூறுகிறது மற்றும் அவர் திரும்பவும் வருவார் என்றும் வாக்களிக்கிறது.

## இயலச் செய்பவர்

இவை யாவற்றுடனும் கூடுதலாக, அப்போஸ்தலர்கள் உலகத்திற்குச் சாட்சியளிக்க அவர்களைப் பரிசுத்த ஆவியானவர் இயலச்செய்வார் அல்லது வல்லமை அளிப்பார் என்றும் இயேசு கூறினார். அவர், "... அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்று கூறினார் (15:26, 27). உலகத்திற்கு மிகப் பெரிய தேவை ஒன்றுள்ளது: அப்போஸ்தலர்கள் இயேசுவுடன் நடக்கையில் அவர்கள் கண்டவற்றை காணுதல். இந்த வெளிப்பாடு, "ஆதி முதல்" முழுமையடைய வேண்டியதாகவும் மிகச்சரியானதாகவும் இருக்க வேண்டியதாயிற்று. இந்தச் செய்தியை விசுவாசிக்க விரும்புகிற எவரொருவரும் விசுவாசிக்கக் கூடும்படிக்கு, இது அப்போஸ்தலர் மற்றும் பிற சாட்சிகளுக்கு முன்பாகச் சான்றளிக்கப்பட்ட வடிவத்தில் முன்வைக்கப்பட வேண்டியதாயிற்று. ஏற்ற காலத்தில், செய்தி இந்த உலகத்திற்கு வெளிப்படுத்தப்படுவதை மாத்திரமல்ல, ஆனால் அது உறுதிப்படுத்தப்படுவதையும் பரிசுத்த ஆவியானவர் காண்பார் - இதை அவர் ஒப்புதல் செய்து உண்மையென்று உறுதிப்படுத்துவார்.

அப்போஸ்தலர்களுக்குள் தங்கி இருப்பதன் மூலமாக அவர் இவை யாவற்றையும் செய்வார்.

## முடிவுரை

பரிசுத்த ஆவியானவருக்கு இயேசு பயன்படுத்திய இயற்பெயர்களைப் பற்றி நாம் நினைக்கையில், அவைகள் நமக்கு நடைமுறைப்படும் வழிகளைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திப்போமாக. அப்போஸ்தலர்கள் சபையின் அஸ்திபாரத்தை இடுகையில் அவர்களுக்கு உதவி செய்த உதவியாளராக அவர் இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் பிரசன்னத்திற்குப் பதிலியாக அனுப்பப்பட்டவராகவும் இந்த உலகத்தில் இயேசுவின் ஊழியத்தைத் தொடர்ந்து செய்பவராகவும் இருக்கிறார். அவர் சத்திய ஆவியானவராக இருக்கிறார், அவர் சத்தியத்தை அதன் முழுமைத் தன்மையில் கொண்டுவந்தவராகவும், அதை இயேசுவின் கடைசி உயில் மற்றும் ஏற்பாடு என்ற வகையில் இப்போது நாம் அறிந்துகொள்ளும் வடிவத்தில் முழுமையாகவும் நிறைவாகவும் கொண்டு வந்துள்ளார். இதை இப்போது நாம் நம்முடைய முழுமையான புதிய ஏற்பாட்டில் கொண்டிருக்கிறோம். அவர் சாட்சியளிப்பவராக இருக்கிறார், அவர் இயேசுவைப் பற்றிய சத்தியத்தை நமக்குக் கொடுத்தவராக இருக்கிறார். அவர் இயலச் செய்யக் கூடியவராக இருக்கிறார், அப்போஸ்தலர்கள் எதைச் செய்வதற்குப் பிரித்தெடுக்கப்பட்டனரோ, அதை அவர்கள் செய்வதற்கு வல்லமை அளித்தவராக இருக்கிறார்.

அனுப்பப்பட்ட தேற்றரவாளன் அப்போஸ்தலர்கள் மூலமாகவும் அவர்கள் பதிவு செய்துள்ள வசனத்தின் மூலமாகவும் செயல்பட்டார். அவர் சத்தியத்தின் மூலமாக நமக்குள் ஊழியத்தைத் தொடருபவராக, சத்தியத்தின் எல்லைகளுக்குள் நமது உதவியாளராக, இயேசுவின் சத்தியங்கள் மூலமாக சாட்சியளிப்பவராக, இயேசுவைப் பின்பற்ற அவருடைய சத்தியத்தின் மூலமாக நம்மை இயலச் செய்பவராக இருக்கிறார். இயேசுவின் நாமத்தில் பரிசுத்த ஆவியை அனுப்பிய தேவனுக்கு நாம் நன்றி செலுத்துவோமாக! இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முந்திய வியாழக்கிழமை இரவில், ஆவியானவரைப் பற்றிய வாக்குத்தத்தம் அப்போஸ்தலர்களுக்கு எவ்வளவு ஊக்கமூட்டுவதாக இருந்திருக்கும்! - மற்றும் அவரது அடிச்சுவடுகளில் இன்றைய நாட்களில் வாழும் நமக்கு அந்த வாக்குத்தத்தம் எவ்வளவு ஊக்கமூட்டுவதாக இருக்கிறது!

---

*"அந்தச் சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள். எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி?" (நடபடிகள் 2:6-8)*

*"பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்; பூலோகத்திலே சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது. நாம் மனுஷருடைய*

*சாட்சியை ஏற்றுக்கொண்டால், அதைப்பார்க்கிலும் தேவனுடைய சாட்சி அதிகமாயிருக்கிறது; தேவன் தமது குமாரனைக்குறித்துக் கொடுத்த சாட்சி இதுவே" (1 யோவான் 5:7-9).*